# வலயக்கல்வி அலுவலகம் - துணுக்காய்
# முதலாம் தவணைப் பரீட்சை - 2020

**பாடம்:- தமிழ் மொழியும் இலக்கியமும்**

சுட்டெண்:....................... **தரம் - 08** **நேரம் : 02 மணி**

## பகுதி - I

**01. மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. வியாபாரி கோபத்தினால் விரைந்தெழுந்தார் இங்கு கோபம் என்பதன் ஒத்த கருத்து
 1. சினம் 2. அமைதி 3. மரம் 4. தென்னை

02. வீட்டின் முற்றத்தில் அழகிய விருட்சம் நின்றது. இங்கு விருட்சம் என்பது
 1. காடு 2. வேம்பு 3. மரம் 4. தென்னை

03. கூண்டிற் கிளி என்ற கவிதைப் பகுதியின் ஆசிரியர்
 1. கு.அழகிரிசாமி 2. அழ.வள்ளியப்பா
 3. க.வேந்தனார் 4. அ.ச.ஞானசம்பந்தம்

04. அரிச்சந்திரன் உண்மை பேசத்தவற மாட்டான் இங்கு உண்மை என்பதன் எதிர்ப்பொருள் யாது?
 1. பொய் 2. சத்தியம் 3. நேர்மை 4. மறதி

05. இலங்கையின் வடக்கே இந்தியா உள்ளது இது உணர்த்தும் பொருள்
 1. ஒப்பு 2. ஏது 3. எல்லை 4. நீங்கல்

06. மருத்துவ தாதியருக்கு பொறுமை அவசியம் இங்கு பொறுமை என்பது
 1. வீரம் 2. வேகம் 3. அவசரம் 4. அடக்கம்

07. நான்காம் வேற்றுடையின் உருபு யாது?
 1. "ஐ" 2."கு" 3."ஆல்" 4. உருபு இல்லை

08. பின்வருவனவற்றுள் காரண இடுகுறிப்புப் பெயராக அமைவது எது?
 1. பறவை 2. நிலம் 3. முற்றி 4. வளையம்

09. முதல் எழுத்துக்களின் எண்ணிக்கை யாது?
 1. 30 2. 18 3. 12 4. 216

10. Compass (கொம்பாஸ்) என்பதன் தமிழ் வடிவம் யாது?
 1. தொலை நோக்கி 2. தானியங்கி
 3. ஒலிவாங்கி 4. திசையறி கருவி

11. பின்வருவனவற்றுள் இடையின எழுத்து எது?
 1. வ் 2. க் 3. ங் 4. ப்



kalvi.lk

12. பின்வருவனவற்றுள் பெயர்ச்சொல்லாக அமையாதது
1. பாடினான் 2. பறவை 3. கதிரை 4. வீடு

13. பின்வருவனவற்றுள் காலப்பெயராக வருவன
1. பூ, இலை, தலை 2. மரம், மனிதன், புத்தகம்
3. நாள், வாரம், சித்திரை 4. நடித்தல், பாடுதல், உண்ணுதல்

14. அறுபதாம் ஆண்டில் கொண்டாடப்படும் விழா
1. பவள விழா 2. அமுத விழா 3. பொன் விழா 4. வைர விழா

15. மா + இலை என்பதை சேர்த்து எழுதினால் வருவது
1. மாஇலை 2. மாவிலை 3. மாயிலை 4. மாவினிலை

16. நான் பென்னம் பெரிய யானையைக் கண்டேன் இங்கு பென்னம் பெரிய என்பது எவ்வகைத் தொடர்
1. இரட்டைக் கிளவி 2. அடுக்குத்தொடர்
3. இணைமொழி 4. அடுக்கிடுக்குத் தொடர்

17. ஒரு பாட்டுடையான் எனக் குறிப்பிடப்படுபவன்
1. இராமன் 2. இலக்குமணன் 3. சத்துருக்கன் 4. பரதன்

18. முகவுரை, தொடருரை, முடிவுரை ஆகிய உறுப்புக்களை தாங்கி வருவது
1. கட்டுரை 2. கடிதம் 3. விளம்பரம் 4. அழைப்பிதழ்

19. எதிர்கால இடைநிலைகளாக வருவன
1. கின்று, கிறு 2. த், ட்,ற் 3. ப், வ் 4. க், ன்

20. உடைமைப் பொருளை உணர்த்தி நிற்கும் வேற்றுமை எது?
1. 3ம் வேற்றுமை 2. 6ம் வேற்றுமை 3. 4ம் வேற்றுமை 4. 5ம் வேற்றுமை

(20x2= 40 புள்ளிகள்)

## பகுதி - II

**01. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக.**

01. வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும்.
02. சுத்தம் பேணிச் சுகமாய் வாழ்வோம்.
03. உடைந்த கைத்தொலைபேசியின் சுயசரிதை.
04. நான் விரும்பும் பெரியார்.

(20 புள்ளிகள்)



kalvi.lk

**02. உமது பாடசாலையில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுனர் விளையாட்டு போட்டி பற்றி உமது நண்பனுக்கு 75 சொற்களுக்கு குறையாமல் கடிதம் எழுதுக.**

(10 புள்ளிகள்)

**03. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. வியாபாரியின் குணப் பண்புகள் எவை?
2. கிரந்த எழுத்துக்கள் 4 தருக
3. கூட்டில் அடைக்கப்பட்ட கிளி விரும்பும் வாழ்வு எத்தகையது?
4. கம்பராமாயணக் காப்பியத்தில் அதிகளவு பாடல்களால் பாடப்பட்டவர் யார்?
5. இராபர்ட் புரூஸ் ஏன் தம்மை நினைத்து வெட்கப்பட்டனர் ?
6. சத்திமுற்றப்புலவர் எதன் மூலம் மனைவிக்கு தூது விட்டார்?
7. டால்ஸ்டாய் எழுதிய நாவலின் பெயர் யாது?
8. வினைச் சொல்லின் பண்பு யாது?
9. பேராசிரியர் ம.மு உவைஸ் ஆற்றிய பணிகள் எவை?
10. நல்ல நூல்களை வாசிப்பதால் ஏற்படும் நன்மைகள் 2 தருக.

(10x 2 = 20 புள்ளிகள்)

**04. பின்வரும் ஒலிவேறுபாட்டுச் சொற்களை வைத்துப் பொருள் விளங்க வாக்கியம் அமைக்குக.**

கணி பழம் குலம் அண்ணம் வலை

(5x2 = 10 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# GRADE 6,7,8

## STUDY WITH US..!

# SCIENCE

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.



| TAMIL MEDIUM | ENGLISH MEDIUM |
| --- | --- |
| 850/= Monthly | 1000/= Monthly |

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page